**இலங்கை கைப்பணிகள் சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கைப்பணிகள் சபையின் (''சபை'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 69 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்பட வேண்டியது, பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் தீர்த்து வைப்பதற்கு நிர்ணயித்த | இந்த மீதிகள் பெரும்பாலும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பெற்றுக்கொடுத்த விநியோகஸ்தர்களாகும். அந்த விநியோகத்தர்கள் விற்பனைக்கு பின்னர் பணம் செலுத்துதல் என்ற அடிப்படையில் பொருட்களை வழங்கியிருந்தார்கள். (Consignment Model) அதன் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொதுவான செயல் நடவடிக்கையின் போது தீர்த்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொறுப்புக்கள் மாத்திரமே ஆகும். எனினும், ரூபா 255,675,927 ஆன மொத்த வியாபார கடன்கொடுத்தோரில் ரூபா 150,440,727 ஆனசெயற் பாடில்லாத 5 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பு செய்யப்படாத கடன் கொடுத்தோர் மீதி ஆகும். அத்தோடு கடன் பட்டோர் மீதியினுள் இலங்கை கைப்பணிகள் சபையின் பெயரில் ரூபா 3,821,690 வரவு மீதி ஒன்று உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியில் கடன் கொடுத்தோர் மீதி குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பிரகாரம் அந்தப் பொருட்கள் 5 வருட காலத்தினுள் விற்பனை செய்யப்படாதிருந்தது உறுதிப்படுத்தப்பட்டது. அத்தோடு அந்த மீதிகள் தீர்ப்பு செய்வதற்கு உள்ள மீதிகள் அல்ல என்பதுடன் அவற்றை பதிவழிப்பதற்கும் முடியாது உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 28 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் இருப்பு மீதியினுள் காணப்படுகின்ற இரண்டாவது தரத்திலான ரூபா 154,646,764 இருப்பில் உள்ளடக்கப்பட்ட இருப்பு பற்றாக்குறை, பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய இருப்பு மற்றும் செயற்பாடற்ற இருப்புக்களில் உள்ளபடியான பெறுமதியை வெளிப்படுத்தாமையினால் அவை தேறிய தேறக்கூடிய பெறுமதியில் காண்பிக்கப்பட்டு கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | இருப்புக்களில் தேறிய தேறக்கூடிய பெறுமதிகள் எதிர்வரும் கணக்கீட்டு வருடங்களில் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்பு தொடர்பாக சகல நட்டங்களையும் நட்டம் ஏற்பட்ட காலப்பகுதியில் | பல வருடங்களில் இருந்து ஒவ்வொரு வருடங்களுக்குரிய இனங்காணப்பட்ட இருப்பு பற்றாக்குறைகளின் கூட்டு மொத்தமாக காணப்படுவதுடன் அவற்றை செலவொன்றாக | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | செலவினமாக இனங்கண்டு கணக்கீட்டு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் தரத்திலான இருப்பினுள் உள்ளடக்கப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 3,425,875 ஆன பற்றாக்குறை இருப்பு தொடர்பாக அவ்வாறு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதியொன்று தேவைப்படுவதுடன் அந்த அங்கீகாரம் கிடைக்கப்பெறும் வரை இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் கூட்டு மொத்த பெறுமதி ரூபா 380,788,639 ஆன சபைக்கு உரித்தான காணிகள், ரூபா 19,279,453 பெறுமதியான கணனி உபகரணங்கள் மற்றும் ரூபா 10,193,250 பெறுமதியான மென்பொருட்கள் மீள் மதிப்பிடப்பட்டு தற்போதைய சந்தை பெறுமதிக்கு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போது காணப்படுகின்ற நிதி நெருக்கடிகளின் காரணமாக இவ்வாறான பணி ஒன்றை மேற்கொள்வதற்கு நிறுவனத்திற்கு வல்லமை ஒன்று காணப்படாதிருப்பதுடன் நிதி நிலைமை சுமுகமான பிறகு இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கோட்டை லக்சல கட்டிடத்தின் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 45,451,390 ஆனது 2014 வருடத்திலிருந்து மீளாய் வாண்டு வரை நடைமுறை வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருப்பது கட்டிடத்தின் ஒரு சில பகுதிகளை உடைத்து வேறுபடுத்துவதற்கே ஆகும். தற்போது கட்டிடத்தின் வேலை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதுடன் அது நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு சரியாக கணக்குகளில் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1993 ஆம் வருடத்தின் சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் ஒப்படைக்கப்பட்ட சபையினால் வியாபார நடவடிக்கைகளை | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம், 1993 ஆம் ஆண்டு சிறு கைத்தொழில் திணைக்களத்தினை மறுசீரமைப்பின் போது, அந்த | சட்டபூர்வமான உரிமையை பெற்றுக்கொண்டு நிதிக் கூற்றுகளுக்கு உள்ளடக்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படுகின்ற நுவரெலியா மற்றும் தும்முள்ள வில் அமைந்துள்ள சொத்துக்களின் சட்ட பூர்வமான உரிமையை பெற்றுக்கொண்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் காணப்பட்ட ஊழியர்கள், கட்டிடங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் இலங்கை கைத்தொழில் சபைக்கு மாற்றப்பட்ட போது, நுவரெலியா, கட்டுபெத்த மற்றும் தும்முல்லை ஆகிய ஆதனங்களும் பொறுப்பளிக்கப்பட்டன. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2015 ஆம் வருடத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற உண்மையாக காணப்படாத ரூபா 986,112 வங்கி மேலதிக பற்றொன்று நிதி கூற்றுகளில் நடைமுறை பொறுப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வான்டிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வங்கி மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 99,973 ஆக காணப்படுவதுடன் மேற்குறித்த நடைமுறை கணக்கிற்குரிய காசு புத்தகத்தின் பிரகாரம் மீதி ரூபா (986,112) மேலதிக பற்றொன்றாகும். அதன் பிரகாரம், அந்த பெறுமதி வங்கி மேலதிக பற்றின் கீழ் நிதி கூற்றுக்களினுள் ரூபா 986,112 ஆக காட்டப்பட்டுள்ளது. மேலும், அந்த மேலதிக பற்றின் பெறுமதி 2015ஆம் வருடத்தில் பிழையாக கணக்கிடப்பட்டுள்ள குறிப்பொன்றின் காரணமாக ஏற்பட்டதாகவும் அவற்றை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பெயரளவிலான பெறுமதியொன்று காணப்படுமாயின் அவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் வருடத்தில் வெளிநாட்டு விற்பனைகளுக்காக ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது இணங்கிய காப்புரிமை கட்டணம் ரூபா 9,090,000 வேறு வருமானங்களாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலே எந்த ஒரு வெளிநாட்டு விற்பனைகளும் இடம்பெற்றிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்திலே ஒப்பந்த மேற்கொள்ளப்பட்ட ∴பெண்சாய்ஸ் (Franchise) விற்பனை முகவர்களினால் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையினால் இந்த காப்புரிமை கட்டணம் செலுத்துவதற்கு முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளதுடன் இந்த பெறுமதிகளை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | உண்மையாக கிடைக்கப்படுகின்ற வருமானங்களை மாத்திரம் கணக்கிடப்பட வேண்டும். |
| (உ) | பௌதிக பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தும்முல்லை காட்சி கூடத்திற்கு உரிய விற்பனை பெறுமதி ரூபா | பொருள் மெய்மையாய்வு பிரிவின் ஊடாக பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு மற்றும் 2023 ஆம் வருடத்தில் பொருள் | இருப்பு பற்றாக்குறை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படுவதற்கு அல்லது கணக்கிடப்படுவதற்கு |

| | | |
|---|---|---|
| 2,915,960 ஆன இருப்பு பற்றாக்குறையொன்று மற்றும் பத்திரமுள்ள காட்சிக் கூடத்திற்கு உரிய சராசரியான சாதாரண கிரயத்திற்கு ரூபா 876,452 ஆன பெறுமதி இருப்பு பற்றாக்குறையொன்று தொடர்பாக நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கோ அல்லது கணக்கிடப்படுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்வு சபையொன்றின் ஊடாக இந்த பற்றாக்குறைகள் முறையாக மதிப்பிடப்பட்டு 2023 கணக்குகளினுள் உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) தும்முல்லை காட்சிக் கூடத்தின் பௌதிக பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்குரிய எந்தவொரு இழப்பும் அறிக்கை படுத்தப்படாத போதிலும் நிதிக் கூற்றின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 1,712,412 ஆன இருப்பு இழப்பொன்று கணக்கிடப்பட்டிருந்தது. | உரிய வருடத்தின் இருப்பு இழப்பானது, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இருப்பு இழப்பு உரிய காட்சிக்கூடத்தின் இருப்பு இழப்பு கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பொருள் மெய்மையாய்வு பிரிவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், அந்த இருப்புக்கள், காட்சி கூடத்தின் விற்பனைக்காக உள்ள இருப்புக்களிலிருந்து நீக்கப்பட வேண்டும். அவ்வாறு இருந்த போதிலும், இருப்பு கணக்குகளினுள் மொத்த இருப்புக்கு இழப்பு ஏற்பட்ட இருப்பும் உள்ளடங்களாக கணக்கிடுதல் மேற்கொள்ளப்படும். | பொருள் மெய்மையாயவின் உண்மை தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 228,677,799 | 80,955,189 | 147,722,610 | சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்ட பின்னர் சரியான மீதிகளை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கடன் கொடுத்தோர் மீதி | 37,952,164 | உப பதிவேடு அல்லது மீதியை உறுதிப்படுத்தல். | இது மிகவும் பழைய மீதியாக இருந்தமையினால் இது தொடர்பான ஆவணங்கள் நிறுவனத்திடம் இல்லாததால், கணக்குகளில் இருந்து நீகுவதற்கு பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்றின் மூலம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | உப பதிவேடு அல்லது மீதியை உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வியாபார கடன்பட்டோர் மீதி | 23,562,897 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் கடினமான பணி ஒன்றாக உள்ளது. ஏனெனில் வியாபார கடன் பட்டோர்களிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய பணம் தொடர்பாக அறிவின்மையே காரணமாகும். மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அட்டுறு செலவினம் | 6,546,541 | செலுத்தப்பட வேண்டிய தரப்பினர் | உறுதிப்படுத்தல் ஆவணங்கள் இன்மையினால் 2023 வருடத்தில் பணிப்பாளர் சபைக்கு அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டு பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய தரப்பினரை உறுதியாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இடைநடு இருப்பு | 11,014,318 | இடைநடு இருப்பை உறுதிப்படுத்த போதுமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த கணக்குகளின் மீதியை சீர் செய்வது மிகவும் கடினமான பணி ஒன்றாக காணப்படுவதுடன் எதிர்வரும் வருடங்களிலே | இடைநடு இருப்பு கணக்கின் மீதியை வருடாந்தம் பரிசீலனை செய்து தீர்வு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அதை சீர் செய்வதற்கு முடியுமான அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது. | | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(5) | உபகட்டுநிதியொன்று வழங்கப்பட்ட பின்னர் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தினால் பெறப்பட்டு 2022 வருடத்திற்குள் 58 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூபா 2,274,351 ஆன முற்பணம் 20 முதல் 285 நாட்கள் தாமதத்துடன் செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளில் சிக்கல்கள் காரணமாக தாமதம் இடம் பெற்றதால் இது தொடர்பாக விசேட கவனம் ஒன்றை மேற்கொண்டு உப கட்டு நிதி பெற்றுக் கொடுத்த உத்தியோகத்தர்களுக்கு நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ஏதேனும் விசேட பணி ஒன்றுக்காக பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்சம் வரை இடைக்கால உப கட்டுநிதி ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கு முடியுமாக இருந்த | விசேட வியாபாரப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தலைவரின் கையொப்பத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 500,000 பணம் ஆகும். மேலும் இந்த விசேட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டது லாக்ஷா பொருட்களை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் அதற்கு முரணாக ரூபா 100,000 வை விஞ்சி இடைக்கால உபகட்டு நிதி ரூபா 2,360,379 ஆன தொகை 10 சந்தர்பங்களில் வழங்கப்பட்டிருந்தது. | கடனுக்கு விநியோகிக்கும் விநியோகஸ்தர்கள் பொருட்களை வழங்காமல் இருந்த காரணத்திலாகும். அதனால் பணம் செலுத்தப்பட்டு தேவையான பொருட்கள் காட்சிக்கூடத்துக்கு கொல்வனவு செய்வதற்கு நேர்ந்தது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவை | | | |
| | தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 21 மற்றும் 23 ஆம் பந்திகள் | 2015 நவம்பர் 19 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக்கூட்டத்தின் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இரண்டு பெண் உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட போதிலும், 2023 மே 20 ஆம் திகதிய கணக்காய்வு திகதி வரையிலும் சபையின் ஒழுக்காற்று அதிகாரியினால் ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணி இடைநீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் சபையினால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகைக்காக உரிய காலத்திற்கு முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களினால் பதில் சமர்ப்பிக்கப்படாததுடன் அதன் பிரகாரம் ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ளன. | தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேற்றின் | | | |

| | | | |
|---|---|---|---|
| 6.6 ஆம் பந்தி | (i) வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதமாகி 2023 ஜுலை 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில், நிறுவனத்தின் கணக்கியல் மற்றும் விற்பனை மேற்கொள்ளும் SAP ERP கட்டமைப்பு எதிர்பாராதவிதமாக 2022 டிசம்பர் மாதத்தில் செயலிழந்ததனால், நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டது. | உரிய திகதியில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | (ii) கணக்காய்வு அறிக்கையுடன் ஆண்டறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களின் ஆண்டு அறிக்கை 2023 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 வருடங்களின் வரைவு ஆண்டறிக்கைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக நிரல் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய திகதியில் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 99,040,670 நட்டமொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 58,546,847 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 40,493,823 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்திற்கு இணையாக சபையின் வருமானத்திள் ரூபா 146,127,213 அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும், அதனுடன் ஒப்பிடும்போது நிர்வாகச் செலவுகள், விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் மற்றும் நிதிக் கிரயம் ரூபா 68,268,047 அதிகரித்தல் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் 1.14 காணப்பட்ட நடைமுறை விகிதம் மீளாய்வாண்டில் 1.02 வரை குறைந்திருந்தது. அதன் பிரகாரம் சபையின் நடைமுறை சொத்துக்களின் அளவு நடைமுறை பொறுப்புக்களை செலுத்துவதற்கு மட்டுமே போதுமானதாக இருப்பதால், சபையின் பணப்புழக்கம் மிகவும் குறைந்த அளவில் இருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும், துரித விகிதம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேலும் குறைந்துள்ளதுடன் நடைமுறை சொத்துக்களில் 87 சதவீதம் இருப்பு மற்றும் முன்பு செலுத்திய கொடுப்பனவுகள் குறிப்பிடப்படுதல் இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 நவம்பர் 30 ஆம் திகதி குதிரை போட்டி மைதானத்திலே காட்சிக் கூடத்துக்காக 10 வருட காலத்திற்கு ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது ரூபா 5,888,000 மீண்டும் அறவிட முடியாத வைப்பு பணம் ஒன்று நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 டிசம்பர் 26 ஆம் திகதி இந்த விற்பனை காட்சிக்கூடம் மூடப்பட்டிருந்தது. அதனால், இது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சபையினால் மாதாந்த குத்தகை செலுத்தும் அடிப்படையில் கட்டிடத்தின் இடங்களை பெற்றுக் கொடுக்கும் போது முறையான சாத்தியவள ஆய்வு ஒன்றை மேற்கொண்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிகள் தொடர்பாக கூடுதலான கவனம் ஒன்றை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தங்களின் நிபந்தனை தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் வருடத்தில் சபையினால் மூடப்பட்டிருந்த கட்டுபெத்த செயல்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடனுக்கு விற்பனைகளை மேற்கொள்வதற்காக 8 கொள்வனவாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 1,182,386 தொகை அறவிட்டு கொள்வதற்கு எவ்வித சட்ட நடவடிக்கையொன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. | 2023 ஆம் வருடத்தில் கட்டுபெத்த செயல் திட்டத்தினால் அறவிடப்பட வேண்டிய கொள்வனவாளர்கள் தொடர்பாக கருத்தில் கொண்டு அந்த அறவீடுகளை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கிடைக்கப் பெற வேண்டிய பணங்களை தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1991 ஜுலை 05ஆம் திகதிய மற்றும் 670 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக காலி விற்பனை காட்சி கூடத்தில் காணப்பட்ட கானி மற்றும் இரண்டு மாடி கட்டிடத்தை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், சட்டபூர்வமான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | சட்டபூர்வமான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டபூர்வமான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடம் வரையான காலப்பகுதிக்குள் அறவிடப்பட வேண்டிய தும்முல்லை பெரிஸ்டா உணவகத்தில் இருந்து ரூபா 456,770 வும், பெரிஸ்டா கோப்பி லங்கா நிறுவனத்திடம் இருந்து ரூபா 4,243,949 வும், தருமிலா மல் கழகத்திடமிருந்து ரூபா 20,000 மற்றும் 8 சூப்பர் பேண்ட் வியாபார நிலையங்களிடமிருந்து ரூபா 4,869,200 ஆக கூட்டு மொத்தம் ரூபா 9,589,919 தொகை 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் நிலுவையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவைத் தொகை யை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெரிஸ்டா உணவகத்தில் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் தருமிலா மல் கழகத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய பணத்தை அறவிடாமல் இருப்பதற்கு முகாமைத்துவக் கூட்டத்தின் போது இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், கணக்குகளில் இருந்து இந்த தொகையை பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சூப்பர் பேண்ட் மூலம் கிடைக்கப் பெற வேண்டிய பணம் கொரோனா தொற்று நிலைமை காலத்தை கருத்தில் கொண்டு கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கிடைக்கப் பெறவேண்டிய பணங்களை தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சபையினால் 2011-2017 வரையான காலப்குதிக்குள் கோட்டை லக்சல கட்டிடத்தை அடகு வைத்து இலங்கை வங்கியிடமிருந்து 12 சந்தர்ப்பங்களில் ரூபா | 2019 ஆம் வருடத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மத்தியில் சுற்றுலா துறை பாதிக்கப்பட்டதனாலும், 2020/2021 ஆம் | வங்கிக் கடன், முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 849,481,500 கடன் தொகையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கடன் தவணை மற்றும் வட்டி பணத்தை முறையாக செலுத்தாததன் காரணமாக அடிக்கடி அட்டுறு வட்டி பணமும் முதலாக்கப்பட்டு வங்கியினால் 14 புதிய கடன் தொகைகளாக மீள் பதிவிடப்பட்டிருப்பதுடன் மீளாய் வாண்டிலே டிசம்பர் 31 ஆம் திகதியில் அவ்வாறான 8 கடன் தொகைகளின் கூட்டு மொத்த பெறுமதி ரூபா 332,607,065 தொடர்ந்தும் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக காணப்பட்டது. | வருடங்களில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக சுற்றுலா பயணிகளின் வரவு முழுமையாக கைவிடப்பட்டிருந்த மையினால் வங்கி கடனை செலுத்துவதற்கு மிகச் சிரமமாக இருந்தது. அதனால் கடன் மீள் பதிவிடப்பட்டிருந்தது. | |
| (உ) | இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்யா கடன் முன்மொழிவு முறைமையின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு வழங்கப்படுகின்ற மீள் நிதி கடன் வசதிகளின் ஊடாக 2013ஆம் வருடத்தில் சபைக்கு ரூபா 200 மில்லியன் கடன் தொகை ஒன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. முறையாக கடன் வட்டியை செலுத்தாததன் காரணமாக திரண்டு இருந்த ரூபா 12,909,761 ஆன மீதியும், புதிய கடன் தொகை ஒன்றாக முதலாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய கடன் மதி ரூபா 171,009,585 வும், 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களுக்கான அட்டுருவாக உள்ள ரூபா 33,721,736 வும் ஆகும். தொடர்ச்சியாக கடன் மற்றும் வட்டி தொகைகளை செலுத்தாததன் அடிப்படையில் 2022 ஒக்டோபர் 14ஆம் திகதிய RDB/HO/RE/122/4 | 2019 இன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2020/2021 ஆகிய வருடங்களிலே ஏற்பட்ட கோவிட் தொற்று காரணமாக விற்பனை வருமானங்களில் பாரிய சரிவு ஏற்பட்டதனால் கடன் தவணையை செலுத்துவதற்கு சபையினால் முடியாது போனது. அதன் பிரகாரம் 2020/2021 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட அட்டுறு வட்டியுடன் 10 வருடங்களுள் செலுத்துவதற்கு திட்டமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வட்டியான ரூபா 33 மில்லியன் தொடர்பாக சபை திருப்தி அடையாததன் காரணமாக இந்த தொகை முழு நாட்டிலும் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை காரணப்படுத்தி இந்த தொகையை நியாயமான வகையில் வட்டியை குறைத்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் வங்கியுடன் | கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் இலக்கமுடைய கடிதத்தின் மூலம் புதிய கடன் செலுத்தும் திட்டமொன்றும் வங்கியினால் முன்மொழிந்த போதிலும் சபை அதற்கு இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. | கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை ஏற்படுத்தப்பட உள்ளது. | |
| (ஊ) | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ள விற்பனை பெறுமதி ரூபா 340,069,730 ஆன இரத்தினக் கல் மற்றும் ஆபரணங்கள் நீண்ட காலத்திலிருந்து மங்களான வர்ணத்தில் காணப்படுவதுடன் அவற்றை விசேட கழிவுகளை பெற்றுக் கொடுத்து அல்லது பொருத்தமான விற்பனை உபாய வழியில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | மங்கலான வர்ணத்தில் காணப்படுகின்ற ஆபரணங்களை விநியோகஸ்தர்களுக்கு மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு (Return) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இருப்பு தொடர்பாக மிகவும் ஆக்கபூர்வமான நடைமுறை ஒன்றை பின்பற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 23,562,897 ஆக காணப்பட்ட போதும், இந்த மீதிகளினுள் பல்வேறு அரச நிறுவனங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 50,000 விற்கும் அதிகமாக உள்ள கடன் பட்டோர் மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 10,560,711 ஆக காணப்பட்ட போதிலும் அந்த மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு முறையான நடைமுறையொன்றை பின்பற்றாமல் அந்தக் கடன் பட்டோர்களுக்கே மீண்டும் பொருட்களை விற்பனை செய்யப்பட்டிருந்தது. | இந்த மீதி மிகவும் பழைய கடன் பட்டோர் மீதியாக காணப்படுவதுடன் இதற்கு உரிய கோவைகள் அவதானிக்கப்பட்டு அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | கடன் பட்டோர்களிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள பிணை பணம் உரிய உத்தியோகத்தர்களின் பெயரில் சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்யப்படாமல் கூட்டு மொத்தம் ரூபா 2,010,000 தொகையொன்று நடைமுறை கணக்கில் வைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த பணத்திற்கு வருடாந்தம் நூற்றுக்கு 6 அளவான ரூபா 1,261,533 வட்டி ஒன்று அந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளதாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்தின் பிணை பணம் சம்பந்தமாக பெறப்பட்டுள்ள வைப்பை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நிலையான வைப்பொன்றாக மாற்றுவதற்கு அல்லது உரிய ஊழியர்களுக்கான தனித்தனியாக சேமிப்பு கணக்குகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சேமிப்பு கணக்குகளை தாமதமின்றி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 நிதியத்தினை குறைவான பயன்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 12,502,564 ஆன செயற்திட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள பணம் மற்றும் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய வைப்பு மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 3,838,357 ஆன மீதி மற்றும் வியாபார பொருட்கள் மற்றும் வியாபாரம் அல்லாத பொருட்களை கொல்வனவு செய்வதற்காக மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக பெற்று கொடுக்கப்பட்டுள்ள ரூபா 16,026,936 ஆன முற்பண மீதியை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 வருடத்தில் விசேட கவனத்தை மேற்கொண்டு தீர்வு செய்வதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | பழைய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காலி உணவாட்டுன சலுசல நிறுவனத்திற்கு உரித்தாக இருந்த 01 ஏக்கர் 30.6 பர்ச்சேஸ் காணி மற்றும் கட்டிடம் 2012 ஒக்டோபர் 11ஆம் திகதிய மற்றும் 12/1523/553/020 இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சபைக்கு உரித்தாக்கப்பட்டது. அதன் பிரகாரம் கொள்வனவு பெறுமதியை கருத்தில் கொண்டு சபையினால் 2012 டிசம்பர் 12ஆம் திகதியில் ரூபா 15,248,575 செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்ண்டிலும் அந்த ஆதனங்களின் சட்ட பூர்வமான உரிமை மற்றும் பாவனைக்குட்படுத்தும் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு தவறி இருந்தது. மேலும், கடுபெத்தவில் அமைந்துள்ள ஆதனங்களையும் சட்டபூர்வமாக உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | இந்த ஆதனங்களின் உரித்தை இலங்கை கைப்பணிகள் சபைக்கு சட்டபூர்வமாக உறுதிப் பத்திரம் ஒன்றின் ஊடாக உரித்தாக்கிக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வரையறுக்கப்பட்ட இலங்கை சலுசல நிறுவனத்திற்கு பல தடவைகள் எழுத்து மூலமாக வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதிலும் அந்த உரித்தாக்கும் நடவடிக்கைகளை வரையறுக்கப்பட்ட இலங்கை சலுசல நிறுவனத்தினால் மேற்கொள்ளவில்லை.<br><br>இதற்குக் காரணமாக உரிய ஆதனங்கள் சம்பந்தமாக தற்பொழுதும் நீதிமன்றத்தில் வழக்கொன்று இடம் பெற்றுக்கொண்டிருப்பதாகவும்.<br><br>எவ்வாறாயினும், கைத்தொழில் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தென்மாகாண அபிவிருத்தி மேம்பாட்டு செயல் திட்டம் ஒன்றுக்காக அந்த அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்குறித்த ஆதனம் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு இலங்கை கைப்பணிகள் சபைக்கு பணம் செலுத்தி பெற்றுக் கொள்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. | ஆதனங்களின் சட்டபூர்வமான உரித்தையும் அவற்றை பாவனைக்குட்படுத்தும் உரிமையையும் அல்லது செலுத்தப்பட்ட தொகையை மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2013 ஆம் வருடத்திலிருந்து 2015ஆம் வருடம் வரை ரூபா 175,118,237 செலவிடப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்ட அருங்காட்சியக கட்டிடத்திற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டை தெரிவிக்காமையினால் 2023 ஜனவரி 01ஆம் திகதி விற்பனை காட்சிக்கூடம், தேசிய அருங்காட்சியாக திணைக்களத்தினால் முத்திரை இடப்பட்டு இருந்தது. இருப்பினும், 2023 ஜுன் 10ஆம் கணக்காய்வு தினம் ஆகும் போது முத்திரை் இடப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் காட்சி கூடத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு சபை தவறி இருந்ததுடன் கூட்டு மொத்தம் ரூபா 99,777,436 ஆன பெறுமதியான இருப்புகள் காட்சிக் கூடத்தினுள் விளைவற்று காணப்பட்டது. | அருங்காட்சியக லக்சல காட்சிக்கூடத்தை மிக விரைவாக மீண்டும் திறப்பதற்கு அல்லது அதனை நவீன மயப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சபை செலவு செய்திருக்கும் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் சம்பந்தமாக கைத்தொழில் அமைச்சு மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மேதகு அமைச்சர்களுடன் மற்றும் செயலாளர்களுடன் தற்பொழுது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. | காட்சிக் கூடத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு அல்லது இருப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கோட்டை விற்பனை காட்சி கூட கட்டிடத்தின் 1200 சதுர அடி அளவான மிக சிறிய காணி அளவு ஒன்று மாத்திரம் பாவனைக்கு உட்படுத்தப்படுவதுடன் 40830 சதுர அடி அளவான கட்டிடவளாகம் நீண்ட காலமாக விளைவற்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | தொல்பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் இந்த கட்டிடம் திருத்தங்களை மேற்கொள்ளுதல், காப்பை ஏற்படுத்தல் மற்றும் மேலதிக வருமானம் ஒன்றை உழைக்கும் வகையில் திருத்தங்கள் மற்றும் நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகளையும் முதலீட்டாளரின் செலவில் மேற்கொண்டு கட்டிடத்தை பாவனைக்கு உட்படுத்துவதற்கு மற்றும் | விளைவற்று காணப்படுகின்ற கட்டிடங்களிலிருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2000 சதுர அடி அளவான இட ஒதுக்கீட்டை லக்சல காட்சி கூடத்திற்காக வேறுபடுத்தல், கட்டிடத்தை அடகு வைத்து லக்சல நிறுவனம் பெற்றுள்ள வங்கிக் கடனை மீட்டுதல் மற்றும் இந்த கட்டிடத்திற்கு உரிய ஏனைய பொறுப்புக்களை தீர்வு செய்வதற்கு போதுமான அளவு முதலீடு ஒன்றை மேற்கொள்வதற்கு விருப்பம் ஒன்றை குறிப்பிடும் மற்றும் அதற்கு வல்லமை உள்ள ‘‘ஸ்ரீ லாங்கீய முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள்’’ ஆகியவற்றிலிருந்து ‘‘வியாபார அபிலாசைகளுடனான முன்மொழிவுகள்’’ கோரப்பட்டு பொருத்தமான தரப்பினர் ஒருவரை தெரிவு செய்வதற்காக தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.